# பொலிஸ், விமானப்படை தலைமையகங்களுக்கு பலத்த பாதுகாப்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 14 இதழ் 299
யாழ்ப்பாணம் புதன்கிழமை 30-11-1994

(கொழும்பு)
பொலிஸ் தலைமையகம், விமானப்படை, சி. ஐ. டி. பொலிஸாரின் கட்டிடங்களின் பாதுகாப்பு பெருமளவிற்கு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி படைக்கட்டிடங்கள் புலிகளின் தாக்குதல்களுக்கிலக்காகலாமென புல

(6ம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆர். — டி.பி.க்கு எதிராக லஞ்சக்குற்றச்சாட்டு

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தன, டி. பி. விஜேதுங்க ஆகியோருக்கு எதிராக, லஞ்ச ஊழல் கமிஷனுக்கு முறைப்பாடுகள் செய்யவிருப்பதாக 'ராவய' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் குழு ஒன்று இவர்களுக்கெதிரான முறைப்

(6-ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளுடன் தொடர்புகொண்டு அரசு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி!

## - ஏ. எவ். பி. தகவல் -

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டு அரசு மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஏ. எவ். பி. செய்திகள் தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் மேற்கொண்டுவருவதாக ஏ. எப், பி. செய்திகளைமேற்கோள்காட்டி வெரித்தாஸ் சிங்கள சேவை நேற்று தெரிவித்தது,

காமினி திஸாநாயக்க கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு சம்பவத்தில் கொல்லப்பட்டதையடுத்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்

(6ம் பக்கம் பார்க்க)

## "புலிகளுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு இருக்கிறது"

(கொழும்பு)
அரசதரப்புக்கு புலிகளுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. முதல் பேச்சு முடிந்தவுடன் காமினி கொலை இடையே வந்து குறுக்கிட்டுவிட்டதால் மீண்டும் எங்கிருந்து தொடங்கலாம் என்று அரசு முடிவுக்கு வராமல் தடுமாடுகிறது. இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது: அரசு மீண்டும் புலிகளோடு பேச்சை ஆரம்பிக்க உறுதியாக விரும்புகின்றது. போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசு வந்தே ஆகவேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இல்லாவிட்டால் புலிகளிட

(6-ம் பக்கம் பார்க்க)

## காமினி கொலை விசாரணை: திருமதி சிறிமா அதிருப்தி

(கொழும்பு)
காமினி திஸாநாயக்கா கொல்லப்பட்டதிலிருந்து அரசு இது தொடர்பாக இது வரையும் திருப்தியான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்று அவரது மனைவி திருமதி சிறிமா திஸாநாயக்கா அதிருப்தியடைந்துள்ளார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## அலுவலகம் இல்லாத அமைச்சர் தொண்டா

(கொழும்பு)
கால்நடை வளர்ப்பு, கிராமிய கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமானுக்கு இன்னும் காரியாலயம் வழங்கப்படவில்லை.

தற்போது அமைச்சர் தொண்டமான் தற்காலிகமாக கொள்ளுப்பிட்டியி

(-6ம் பக்கம் பார்க்க)

## பிரேமச்சந்திரா மனைவி எம்.பி. பதவியேற்க மறுப்பு

(கொழும்பு)
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொலையுண்ட முன்னாள் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திராவின் நடாளுமன்ற இடத்திற்கு அவரது மனைவி திருமதி மாலினி பிரேமசந்திராவை நியமிப்பதற்கு, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எடுத்த முடிவிற்கேற்ப அப்பதவியை ஏற்க திருமதி மாலினி மறுத்துள்ளார்.

தனது கணவர், தான் அரசியலில் நுழைவதை விரும்பியிருக்கவில்லையென்றும் கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு தனக்கு திருப்தி தரவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

(6ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பேச்சுக்கான தளம் பல்வேறு மட்டத்தில் தயாராகிறது!

[கொழும்பு]
இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான தயாரிப்புகள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப் படுகின்றன என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தையில் இனப்பிரச்னை தீர்வுக்கு அரசாங்கம் எத்தகைய தீர்வை முன்வைக்கப் போகின்றது என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பலருடனும் கலந்தாலோசித்து தீர்த்தல், பேச்சு வார்த்தை தோல்வியடைந்தால் ராணுவ நிலைப்பாடு, கடந்தகால பேச்சுக்

(6ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. [சா/த] பரீட்சை: இதுவரை அனுமதி அட்டை கிடைக்காதவர்களுக்கு!

(யாழ்ப்பாணம்)
க. பொ. த. (சாதாரண தரம்)-1994 பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் இதுவரை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள், தங்கள் விண்ணப்பத்தின் சரியான பிரதி ஒன்றைத் தயாரித்துத் தங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் நாளை முதலாம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இவ்விண்ணப்பப் பிரதியில்,

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கொலைபட்டியலில் ரத்வத்தைக்கு முதலிடமாம்!

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் தாக்குதல் பட்டியலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் பெயர் முதலிடத்தில் இருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளளது.

இந்த தகவலையடுத்து அண்மையில் பாதுகாப்பு கவுன்சிலில் இதுபற்றி ஆராயப்பட்டதாகவும் இதன்பின் கேணல் ரத்வத்தையின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாம்.

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு

நல்லின பிறிமா புறோயிலர்கள் உடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் இறைச்சிக் கோழியும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் (துப்பரவும் செய்துதரப்படும்) தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை இராஜ வீதி, கோப்பாய். (எ- 4536)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1313)

### விற்பனைக்கு

எதிர்வரும் 01-12-94 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில பாவித்த துண்டு மரங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். யாழ்/வணிகர்கழகம். (ஏ-4541

### பூவோடை இந்து மயானம் புனரமைப்பு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பூவோடை இந்து மயானம், மயான அபிவிருத்தி சங்கத்தினரால் புனரமைப்பு செயப்பட்டுகிறது.

மயான அபிவிருத்திச்சங்கத்னர் பிரதி மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்கொண்டுவரும் சிரமதான வேலைகளினல் மேற்படி மயானத்திலுள்ள மடத்தை சுற்றியுள்ள கற்கள் மற்றும் பற்றைகள் அகற்றப்பட்டுள்ளன.

மயான தேவைகளுக்கென அங்குள்ள கிணறு இறைககப்பட்டு தண்ணீர் பாவனைக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது, (109)

### தென்னங்கன்றுகள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

அதிகளவு தேங்காய்களைக் குறுகிய காலத்தில் விளைச்சலாகத் தரக்கூடிய கலப்பின தென்னங்கன்றுகள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவ் நல்லின தென்னங்கன்றுகளைப் பெற விரும்புவோர் 75, யமுனு வீதி நல்லூரில் அமைந்துள்ள தென்னை நாற்று மேடையிலிருந்துபெற்றுக்கொள்ளலாம்.

மேலும் தென்னை நடுகை. உரமிடுதல், பீடைக்கட்டுபாடு போன்ற இலவச ஆலோசனைகளையும் ஒவ்வொரு புதன் கிழமையும் கமநலசேவை நிலையம், நல்லூரில் அமைந்துள்ள தென்னை பயிர்ச்செய்கைச் சபையில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தி ஜேந்திரனிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

உதைபந்தாட்டம்

# மத்தியஸ்தர் தெரிவிற்கு பயிற்சி வகுப்பு ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், புதிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை தெரிவுசெய்யும்முகமாக எதிர்வரும் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் பயிற்சி வகுப்புக்களை நடாத்தவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு சனியும், ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு ஈச்சமோட்டை வீதியிலுள்ள மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறுமென்றும் இப்பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள உதைபந்தாட்ட வீரர்களை அனுப்பிவைக்கும்படி. வலிகிழக்கில் உள்ள 54 விளையாட்டுக்கழகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக இச்சங்கத்தின் செயலாளர் திரு. எம். பிரான்ஸிஸ் தெரிவித்தார். விசி

# அரச கரும மொழியின் குறைபாட்டை நிவர்த்திக்கலாம்

(அநுராதபுரம்)

''அரச கருமமொழியில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு தற்போது நல்லகாலம் வந்துள்ளது'' இவ்வாறு நாடாளுமன்ற சபாநாயகர் திரு. கே. பி. ரட்ணயக்கா அநுராதபுரத்தில நடைபெற்ற வைபவம் ஒன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் கூறினர்.

சபாநாயகர் இவ்வைபவத்தில் மேலும் உரையாற்றுகையில்: ''சிங்களவர் தமிழ் மொழியையும், தமிழர் சிங்கள மொழியையும் கற்கவேண்டும். அத்துடன் இரு சமூக பிள்ளைகளும் ஒரே பாடசாலையில் கல்விகற்கவேண்டும்.

இவ்வாறு ஒன்றுபட்டுசெயல்பட்டால்தான்சமாதானத்தை ஏற்படுத்துவதுடன் இந்த நாட்டின் இனவாதத்தையும் உடைத்தெறிய முடியும் என்று கூறினர். வி-சி

● இந்தியாவில்

# 1,600 தமிழ் போராளிகள் இராணுவபயிற்சி பெற்றனர்

(சென்னை)

1987இல் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு முற்பட்ட காலமான 1983 முதல் 1987 வரை 1600 இலங்கை தமிழ் போராளிகளுககு இந்தியா இராணுவ பயிற்சி அளித்ததாக எம். ஆர். நாராயணசாமி எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஏ. எவ். பி. செய்தியாளரான தமிழ்நாடு, நெல்லியைச் சேர்ந்த திரு. நாராணசாமி எழுதிய 'இலங்கையின் புலிகள்-பையன்களில் இருந்து போராளிகள் வரை' என்ற அந்த நூலிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்,

தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா பயிற்சி வழங்கியதால், ஈழப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார். கே-ரி

# செய்திச்சிதறல்

### குழந்தைகளுக்கு காய்ச்சல்

(அரியாலை)

அண்மைக்காலமாக பெய்துவரும் மழையினல் அநேக குழந்தைகளுக்கு காய்ச்சல், இருமல், சளி போன்ற நோய்கள் ஏற்பட்டுள்ளன. குழந்தைகள் வார்ட்டில் காய்ச்சலினல் பல குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன 59

### பயிற்சிக்குத் தெரிவு

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றும் ஐந்து பேர் பரிசாரகர் (அற்றன்டன்) பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனல் இவ்வைத்தியசாலையில் சிற்றூழியருக்கு பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 72

### அடிக்கல் நாட்டுவிழா

(கொழும்புத்துறை)

இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. சங்சத் தலைவர் திரு. சந்திரகுமார் தலைமையில் பருத்தித்துறை கடற்றொழிலாளர் சங்க பரிசோதகர் திரு. ந. கணேசமூர்த்தி அடிக்கல்லை நாட்டி வைத்தார் 154

### கட்டாககாலி நாய்கள் தொல்லை

(அரியாலை)

யாழ். நகரில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துள்ளது, இதனல் இரவு நேரங்களில் வீதியால் செல்வோர் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளது. 59

### மாதாந்த உதவிப் பணம்

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஒக்ரோபர் கொடுப்பனவு தற்போது யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் மேற்படி பிரிவுகளின் தபாலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் தொழு நோய், புற்றுநோய், காச நோய் என்பவற்றல் பாதிக்கப்பட்டோருக்கான உதவி தொகையும் வழங்கப்படுகின்றன. 101

### நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ். குடாநாட்டில் தற்போது தொடர்ந்து பெய்யும் மழையினல் குளம், குன்றுகளில் மழைநீர் தேங்கி நிற்பதாலும், வாய்க்கால்களில் தேங்கி நிற்கும் நீர் ஓட்டமின்றி இருப்பதாலும் நுளம்புகள் பெருகியுள்ளன. இதனல் மலேரியா காய்ச்சல் அநேகருக்கு ஏற்பட்டுள்ளன. 59

### கழிவறைகள் அமைப்பு

(கொழும்புத்துறை)

வலிகாமம் மேற்கில் பாவனையாளர்கள், வியாபாரிகள் வசதிகருதி இப்பகுதிச் சந்தைகள் இரண்டில் கழிவறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் சுழிபுரம் சத்தியகாடு, சங்கானை ஆகிய இடங்களில் அமைந்த இரு பொதுச் சந்தைகளில் இந்தக் கழிவறைகளை அண்மையில் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 154

### காற்றினல் குடிசைகள் சேதம்

(அரியாலை)

யாழ். குடாநாட்டில் தற்பொழுது வீசிவரும் காற்றினல் யாழ். கரையோரப் பகுதிகளிலுள்ள ஓலைக்குடிசைகள் சேதமடைந்துள்ளன. வாழைகள், முருங்கை, மரவள்ளி ஆகிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. கடல் கொந்தளிப்பினல் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. 59

### பனை விதைகள் நாட்டப்பட்டன

(பளை)

பளை ப தெ. வ. அ. கூ. சங்கம் தனது எல்லைப் பரப்பில் அண்மையில் பத்தாயிரம் பனம் விதைகளை நாட்டியுள்ளது. இந்நிகழ்வு அச்சங்கத்தின் பொது முகாமையாளர் சி, சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது. (156)

### வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் குருளைர் சாரணர் வருடாந்தவிழா கைதடி நவீல்ட் பாடசாலையில் கிளிநொச்சி/தென்மராட்சி சாரண மாவட்ட ஆணையாளர் திரு. சு. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை சாரண மாவட்ட ஆணையாளர் திரு. கோ. செல்வவிநாயகம் கலந்து கொணடார்,

### சிரமதானம்

(நெல்லியடி)

கரவெட்டி நாமகள் சன சமூக நிலையம் சிரமதானம் மூலம் திருத்தப்பட்டுள்ளது,

நிலையத் தலைவர் திரு. க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானத்தில் நிலைய மைதானமும், நான்கு பக்க வேலிகளும் திருத்தம் செய்து வைக்கப்பட்டன.

### நிரந்தர குடிமனைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட நிலையம், நாவாந்துறை மண்பிட்டிப் பகுதியில் வசதி குறைந்த மக்களுக்கு முப்பத்தேழு குடிமனைகள் அமைத்து வழங்கியுள்ளது.

இப்பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்தக குடும்பங்களுக்கே நிரந்தரக் குடிமனைகள் அமைத்து வழங்கியுள்ளது. (162-ரி)

### பரிசாரகர் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

யாழ.மாவட்ட அரசாங்க வைதத்திய சாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர் மத்தியிலிருந்து பரிசாரகர் [அற்றன்டன்] பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அடுத்த மாதம் தொடக்கம மூன்று மாதகால பயிற்சி வழங்கப்படவிருக்கிறது, 72

### லியோ கழகம் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

இராணுவ நடவடிக்கையின் போது பெற்றோரை இழந்து வறுமைக்கோட்டின்கீழ் வாழும் நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆண்டு ஐந்துக்குட்பட்ட மாணவர்களுககு யாழ். மாவட்ட லியோ கழகத்தினர் அன்பளிப்புப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

29 பாடசாலைகளைச் சேர்ந்த 245 மாணவர்கள் இதனல் பயன் பெற்றனர். -154

### கிணற்றில் விழ்ந்து சிறுவன் மரணம்

(உடுவில்)

முகம் கழுவுவதற்காக கிணற்றில் இருந்து தண்ணீர் அள்ளிய ஏழு வயதுச் சிறுவன் கிணற்றுள் தவறி விழுந்து மரணமானர். இப்பரிகா. மரணம் சுதுமலையில் நடைபெற்றது.

சுதுமலை அம்மன் கோவிடியைச் சேர்ந்த சிவானந்தன் விக்கினேஸ்வான (வயது 7) என்பவரே மரணமான சிறுவனவார். -109

### விளையாட்டு போட்டி முடிவுகள்

(ஆனைப்பத்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாதிரி வீடமைப்புத் திட்டத் திறப்பு விழாவையொட்டி சிறுவர் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட இல்ல விளையாட்டுப் போட்டியின் முடிவுகள்:

1-ம் இடம் கேடில்ஸ் நகர் சிறுவர் பாடசாலை (பச்சை இல்லம்) 2-ம் இடம் பண்டிதர் குடியிருப்பு 'சந்திரன்' சிறுவர் பாடசாலை (மஞ்சள் இல்லம்) 3-ம் இடம் பண்டிதர் குடியிருப்பு 'திலீபன்' சிறுவர் பாடசாலை (நீல இல்யிம்) 4-ம் பளை சிறுவர் பாடசாலை(றேஸ் இல்லம்) 5-ம் இடம் பண்டிதர் குடியிருப்பு 'அன்னை பூபதி' சிறுவர் பாடசாலை (சிவப்பு இல்லம்)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் இன்று பி. ப. 1-30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. கா. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ். கல்விப்பணிப்பாளர் (வலயம்-2) திரு. க. கந்தசாமி கலந்து கொள்கிறார். -ரி

### அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை வியாழக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு மடத்தில் இயங்கும் யாழ். யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் இன்று புதன் கிழமை பி. ப. 2-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ரி)

### விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை & மெந்து துறைமுக ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று டிசம்பர் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்குழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு வலப்பக்ககாகவுள்ள தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

### சிறுவர் கட்டுரை மாலை

(கொழும்புத்துறை)

ஆசிரியர் திரு. த. நாகேஸ்வரன் எழுதிய ''சிறுவர் கட்டுரை மாலை'' என்ற நூலைச் சரசாலை இந்துமன்றச் செயலாளர் திரு. க. சிவசங்கரநாதன் அண்மையில் சம்புரதாய பூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

இதன் முதற்பிரதியை விரிவுரையாளர் திரு, ம. நாகேஸ்வன் பெற்றுக்கொண்டார். -154

யாழ்ப்பாணம் ... நூலகம்.

# பாடசாலைகளின் பிரதியீடாக ஒருபோதும் தனியார் கல்வி நிலையங்கள் இருக்கமாட்டாது

## - அருள்நங்கை பேட்டி

(யாழ். நகரின் முன்னேடி கல்வி நிலையங்களுள் ஒன்ருகத் திகழும் புதிய உயர் கல்வி நிலையத்தின் இயக்குநரும், இந்து நாகரிக பாட விரிவுரையாளருமான திருமதி எஸ். அருள் நங்கையுடனான பேட்டியை வாசகர்களுக்கு இங்கு தருகிறோம்)

கேள்வி: யாழ். மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் எத்தகைய நிலையிலுள்ளது. இதனை அபிவிருத்தி செய்யும் வழிமுறைகள் எவை?

பதில்: இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது குறிப்பாக கொழும்பு போன்றவற்றுடன் ஒப்பிடும் போது யாழ். மாணவர்களின் கல்வித் தரம் குறைந்துள்ளது என்பது உண்மைதான்: ஏனைய மாணவர்களுக்கு உள்ள வசதிகளோ வாய்ப்புகளோ எமது மாணவர்களுக்கு இல்லை,

குறிப்பாக வடக்கு கிழக்கில் தொடரும் யுத்த நிலையால், விமான மற்றும் இராணுவ நடவடிக்கை மற்றும் பொருளாதார தடையாலும் எமது மாணவர்கள் உடல, உள ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள் இந்நிலையிலும் கூட மாணவர்கள் சுயதேடலின்மூலம் தம் அறிவைப் பெற்றுக்கொள்வதுடன் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் வழங்கப்படும் பாடக்குறிப்புகளையும் பயன்படுத்தி பரீட்சைகளை திறமையாக செய்தல் வேண்டும்.

கேள்வி, க. பொ, த. (சாதாரணம்) (உயர்தரம்) மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்புற அமைவதற்கு தனியார் கல்வி நிலையங்கள் தான் காரணம் என ஒரு கருத்து நிலவுகிறது பாடசாலைகள் தரப்பில் இதற்கு எதிர்வாதமும் முன் வைக்கப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து!

பதில்: தனியார் கல்வி நிலையங்கள் ஒருபோதும் பாடசாலைக்கு பிரதியீடாக அமையமாட்டாது. ஆனால் தனியார் கல்விநிலையங்களைப் பொறுத்த வரையில் மாணவர்களின்பாட விதானங்களுக்கு ஏற்ப பல தரப்பட்ட விடயங்களையும் ஆராய்ந்து மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகிறது. இது விடயத்தில் எமது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறோம். ஆனால் மாணவர்களைப் பொறுத்தவரையில் தனியார் கல்வி நிலையங்கள் அவர்களின் கல்வி வளர்ச்சியில்

**பேட்டி கண்டவர்**

**நீர்வைக் கணேஸ்**

இன்றியமையாத அம்சமாகி விட்டதை உணர்கிறார்கள். எம்மீது அவர்கள் பூரண நம்பிக்கை வைக்கிறார்கள். நாமும் விசுவாசமாக ஒத்துழைப்பு வழங்குகிறோம்.

கேள்வி; வெளிவாரி பட்டதாரி மாணவர்களை பொறுத்த வரையில் தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் முழுமையான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவா? குறிப்பாக நூலக வசதிகள் பற்றி என்ன கூறுவீர்கள்?

பதில்: யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெளிவாரி பட்டதாரி மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களையே முழுமையாக நம்பியிருக்கிறார்கள். இதுவிடயத்தில யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரி மாணவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாத நிலையில் உள்ளது. நாமும் அம்மாணவர்களுக்கு தேவையான பாடத் திட்டங்களை எம்மால் முடிந்த அளவுக்கு பூர்த்தி செய்கின்றோம். மேலும் நூலக வசதியை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்குமளவுக்கு தனியார் கல்வி நிலையங்கள் இன்னமும் வளர்ச்சியடையவில்லை. மாணவர்களைப் பெறுத்தவரையில் தாமாகவே சுயமுயற்சியில் தம் அறிவை விருத்தி செய்ய வேண்டும்.

கேள்வி: இந்து நாகரிக பாடத்தை நீங்கள் கற்பிப்பவர் என்ற வகையில் இளம் சமுதாயத்தினரின் சமய நம்பிகைகள்பற்றி கூறுவீர்களா?

பதில்: ஏனைய மதத்தினருடன் ஒப்பிடும்பொழுது எம் இளம் சமுதாயத்தினர் ஆலயங்களுக்குச் செல்வதிலோ அல்லது சமய வைபவங்களில ஈடுபடுவதோ மிகவும் குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் அவ்வவ் மதங்களிடம் இயல்பாகவுள்ள கட்டுப்பாடுகள், சமயபீடங்களின் வழிநடத்தல்களும் ஒரு காரணமாக இருக்கலாம். மேலும் இந்து சமயம், இந்து நாகரீகம் போன்றவற்றை மாணவர்கள் தமது பரீட்சைக்கு ஒரு பாடமாக எடுக்கின்றார்களே தவிர சமய தத்துவங்களை அறிந்து அவற்றை கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை.

கேள்வி: தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களை பரீட்சை நோக்கில் தயார் படுத்துகின்றனதே தவிர அவர்களின் ஆளுமை வளர்ச்சியில் பங்களிப்பை செலுத்துவதில்லை என்ற கருத்து கற்றோர்மத்தியில் நிலவுகிறதே?

பதில்: எம்மைப் பொறுத்த வரையில் மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்வது எமது முக்கிய கடமை. அதனை முழுமையாக நிறைவேற்றுகிறோம். இங்கு ஆளுமை என்று குறிப்பிடும்போது மாணவர்களின் கல்வி நிலை, குணதிசயங்கள் போன்ற பல்வேறு அம்சங்களை குறிக்கும்.

இவற்றில் நாம் கவனம் செலுத்துவது என்பது உண்மையில் சாத்தியமற்றது என்றே குறிப்பிடவேண்டும். ஏனெனில் பெருமளவு எண்ணிக்கையில் மாணவர்கள் கல்வி கற்க வருவதால் ஆளுமை பற்றி கவனம் செலுத்துவது முடியாத காரியம்.

மேலும் இவ்விடயத்தில் பெற்றோர், பாடசாலைகள் போன்றன உரிய கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். மேலும் நான் முன்பு குறிப்பிட்டதுபோல தனியார் கல்வி நிலையங்கள் என்பது பாடசாலைகளின் பிரதியீடுகளாக ஒருபோதும் இருக்கமாட்டாது என்பதனை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

கேள்வி:- பட்டதாரியாகிய நீங்கள் பல்வேறு உயர் பதவிகளைப் பெற வாய்ப்பிருந்தும் இத்துறையைத் தேர்ந்தெடுத்த காரணம்?

பதில்:- 1983-ம் ஆண்டு காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இந்து நாகரீகத் துறை விரிவுரையாளராக நான் கடமையாற்றிய காலத்தில் 1983 இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்தேன். மீண்டும் அப்பதவியையோ, அல்லது வேறு பதவிகளையோ வகித்திருக்க முடியும், ஆனால் யாழ் மாவட்டத்தில் மாணவர்களின் கல்வித் தரத்தைக் குறிப்பாக பட்டதாரி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். உயர்ந்த அறிவுள்ள ஓர் சமுதாயத்தை உருவாக்க எனது பங்களிப்பினை வழங்கவேண்டும் என்பதே எனது கனவாக இருந்தது. எனவே மாணவர்களுடன் பழகும் இத்துறையை தேர்ந்தெடுத்தேன்,

கேள்வி:- இறுதியாக கல்வி உலகை சார்ந்தவர் என்ற வகையில் மாணவர் சமுதாயத்துக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

பதில்:- மாணவர்கள் வெறுமனே பாடசாலைக் கல்வியையோ அல்லது தனியார் நிலையங்களின் கல்வியிலோ மட்டும் தங்கியிராது சுய ஆற்றல்களை மேம்படுத்தும் வகையில் நிறைய நூல்களை வாசிக்க வேண்டும். நன்றாகச் சிந்தனை செய்யவேண்டும். தத்துவ ஞானி சோக்கிரட்டீஸ் குறிப்பிட்டதுபோல் ஏன், எதற்கு என்றவினாக்களைப்போட்டு சிந்தனைக்குமுக்கிய இடம்கொடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். (க-சி)

---

# சுகாதார விதிகளை பின்பற்ற கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகர்ப்புறங்களில் வயிற்றோட்ட நோய் பரவிவருவதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவந்த மழை காரணமாகவே இந்நோய் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் சுகாதார விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் இந்த வகையாக நோய் பரவாத ஒவ்வொருவரும் தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நீர் நிலைகள் நிறைந்து காணப்படுவதால் நீரிலிருந்து கிருமிகள் மூலம் நோய் பரவாது தடுக்குமுகமாக கொதித்து ஆறிய நீரைப் பொதுமக்கள் பருகுமாறும் வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 162

---

## மாணவர் அனுமதி

(ஆனைப்பந்தி)

யாழ். இந்து மகளிர் கல்லூரி விடுதியில் இணைந்து இயங்கி வரும் ஆரம்ப பாடசாலைகளான புங்குடுதீவுஇறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம், ராஜராஜேஸ்வரி வித்தியாலயம் துரைசாமி வித்தியாலயம் என்பவற்றில் ஆண்டு ஒன்றில் புதிதாகமாணவர்களைச் சேர்த்துக் கொள்ள விரும்புவோர் மேற்படி வித்தியாலயங்களின் அதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது. 101

---

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்

# இடமாற்ற விண்ணப்பம் சமர்ப்பிக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்களிடமிருந்து எதிர்வரும் 1995 ம் வருடத்திற்கான இடமாற்றத்திற்குமான விண்ணப்பங்களை கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் கோரியுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாண பணிப்பாளர் அலுவலகத்தினால் இவ்வாரம்றத்திற்கு யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கஷ்ட பிரதேசத்தில் இரண்டு வருடங்கள் கடமையாற்றியவர்களும், இலகு பிரதேசத்தில் ஐந்து வருட காலம் கடமையாற்றியவர்களும் இடமாற்றத்திற்கு உரித்துடையவர்கள் என்றும், இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் மூன்று பிரதிகளில் தங்கள் இடமாற்ற விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் யாவும் 1995 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதியன்று செயற்படுத்தப்படத்தக்கதாக இடமாற்ற அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. 72

---

# குளத்திலிருந்து இளைஞர் சடலம் மீட்பு

(பளை)

வரணிப் பகுதியிலுள்ள அம்மா கடையடி என்ற இடத்தில் உள்ள குளமொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் இளைஞர் ஒருவரின் சடலத்தை அவ் ஊர்மக்கள் கண்டெடுத்துள்ளனர்.

இவ் இளைஞனின் முதுகில் அடிகாயங்கள் இருந்ததாகவும், ஒரு பல் உடைந்து இருந்ததாகவும் தெரியவருகின்றது. இவ் இளைஞனின் சடலம் பின் அவரின் பெற்றோரால் யாளம் அடையாளம் காணப்பட்டது. சிவகுரு குணகுமார் (வயது 26 வரணி) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார். இவரின் மரணம் தொடர்பாக காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகிறார்கள். 156 சி

---

## முட்டை விலை அதிகரிப்பு

[அரியாலை]

யாழ். நகரில் முட்டையின் விலை திடீரென உயர்ந்துள்ளது. ஐந்துரூபாவாக விற்ற முட்டை ஒன்று ஒன்பது ரூபாய் வரை விற்கப்படுகின்றது.

கோழிப்பண்ணைகளிலிருந்து முட்டைகள் வருவது குறைந்துள்ளதாலும் பண்டிகை காலங்கள் நெருங்குவதாலும் அதிகமானோர் பெருமளவு முட்டைகளை வாங்குவதாலுமே இவ்விலை அதிகரிப்புக்கு காரணமெனக் கூறப்படுகிறது (59)

---

# கூட்டுறவு ஊழியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

[பண்டத்தரிப்பு]

தேசிய கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்பட்டு வரும் கூட்டுறவாளர் தராதர பயிற்சி நெறியில் பயிற்சிபெற்று இறுதிப் பரீட்சையில் சித்தி பெறும் சங்க ஊழியர்களுக்கு அவர்களது ஒருமாத சம்பள பணத்தை ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்குவது என்று பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச்சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க 1994ம் வருடத்திற்கான கூட்டுறவாளர் பயிற்சியில் பயிற்சிபெற்று இறுதிப்பரீட்சையில் சித்தி பெற்ற மூன்று சங்க ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப்பணமாக அவர்களது ஒருமாத சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. 72

---

டிசம்பரில்

# பாடசாலை வேலைத்திட்டம் தயாரிக்க வேண்டும்

(உடுவில்)

1995-ம் ஆண்டுக்கான பாடசாலை வேலைத்திட்டங்களை எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள்ளேயே தயாரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா அறிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத் திட்டங்கள், செயற்பாடுகள், மதிப்பீடுகள் பற்றி திட்டமிடுமாறும், அடுத்த ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தை ஒழுங்கமைத்து ஒப்படைக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

ஜனவரி மாதத்தில் பாடசாலை ஆரம்பான தினத்தன்றேகற்பித்தல் நிகழ்வுகள் நடைபெறக்கூடியதாக வகுப்பறை நேரசூசிகளை தயாரித்து ஆசிரியர்களிடம் வழங்குமாறும், நேரசூசி அமைக்கும்போது ஆரம்ப பாடசாலை அதிபர்கள் 18 பாட வேளைகளும் ஏனைய பாடசாலை அதிபர்கள் 11பாட வேளைகளிலும் வாரத்தில் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடக்கூடியவாறு அமைத்துக்கொள்ளுமாறும்அவர் அறிவித்துள்ளார். -109

★ நாளை உலக 'எய்ட்ஸ்' தினம்

# மனித இனத்திற்கு சவால்விடும் 'எய்ட்ஸ்'

'எய்ட்ஸ்' உலகத்தை இன்று குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சுவீடன், நோர்வே போன்ற மேற்குலக நாடுகளையும் ஆசியாக் கண்டத்தையும் ஆட்டிப்படைக்கின்ற ஓர் ஆட்கொல்லி நோய் என்றால் மிகையாகாது.

மிகக் குறுகிய காலத்திலேயே சர்வதேசரீதியில் 'உலக எய்ட்ஸ் தினம்' பிரகடனப்படுத்தி மாநாடு நடத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏனெனில் முதன் முதலாக 1981ம் ஆண்டில் அமெரிக்காவில் அதுவும் தன்னினச்சேர்க்கையில் (Homosexuals) ஈடுபடுபவர்களுக்கே பெரும்பான்மையாக, 159 பேருக்கே ஏற்பட்டதாக இனங்காணப்பட்டது.

பதின்மூன்று வருடங்களில் இந்த ஆண்டின் முற்பகுதியில் உலகம் பூராவும் 187 நாடுகளில் 8,50,000 பேருக்கு ஏற்பட்டிருப்பதாக W.H.O என்கின்ற உலக சுகாதார நிறுவனத்திற்கு தகவல்கள் கிடைத்திருந்தாலும் அதன் பூர்வாங்க அறிக்கையில் 30,00,000 பேருக்கு எய்ட்ஸ் இருப்பதாகக் கூறுகின்றது. மேலும் எய்ட்ஸை ஏற்படுத்தும் எச்.ஐ.வி. கிருமிகள் 150,00,000 பேருக்கு தொற்றியிருக்கின்றதாம். அத்துடன் 2000ம் ஆண்டளவில் மேலும் 400,00,000 பேருக்கு எய்ட்ஸ் ஏற்படுமென்றும் இதில் 100,00,000 பேர்வரை இந்தியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கொங்கொங், கொழும்புபோன்ற இடங்களில் ஏற்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ள.

இது ஓர் பாலியல் உறவு சம்பந்தப்பட்ட வியாதி என்பதனால் 15க்கும் 40ற்குமிடைப்பட்ட வயதினருக்கே பெரும்பாலும் ஏற்படுகின்றது. எந்தவொரு குடும்பத்திலும், சமூகத்திலும், தேசத்திலும் 15 — 40 வயதினரே முக்கியமான உழைப்பாளிகளாகும். எனவே இந்த வயதினருக்கு நோயும், இறப்பும் பெருமளவில் ஏற்படுகின்றபோது மொத்தத்தில் ஒரு நாட்டிற்கு ஏற்படுகின்ற இழப்பு அளப்பரியதாகும்.

## எய்ட்ஸ் என்றால் என்ன?

A. I. D. S- (Acquired Immune DeficiencySyndrome) இது H. I. V. (Human Immuno Deficincey Virus) என்கின்ற ஒருவகை வைரசுக் கிருமிகளினாலேயே ஏற்படுகின்றது. இதில் இரண்டுவகை உண்டு. ★H I.V-I ★ HIV II ஆனாலும் ஆசியாவில் HIV-I வகையினாலேயே அநேகம் பேருக்கு எய்ட்ஸ் ஏற்படுகின்றது. உடலில் இயற்கையாகவே நோயை 'எதிர்க்கும் சக்தி' (Immune System) இருக்கின்றது. எமக்கு அன்றாடம் அடிக்கடியும் கடுமையாகவும் நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்கு இதன் பாதுகாப்பே அடிப்படைக் காரணமாகும். இதில் இரண்டுவகையான கலங்கள் இருக்கின்றன. B- Lymphocytes- 20% சதவீதம், T-Lymphocyt s- 80% சதவீதம்.

எய்ட்ஸை ஏற்படுத்தும் எச்.ஐ.வி கிருமிகள் இந்த 'T-கலங்களை' அழிப்பதன் மூலம் உடலின் பிரதானமான பாதுகாப்புச் சக்தியை இழக்கச் செய்கின்றது. இதனால், சாதாரண வேளைகளில் உடல் ஆரோக்கியமாக இருக்கின்றபோது பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தாத நோய்கிருமிகள் இந்த நலிவடைந்த சந்தர்ப்பத்தைப் (Opporunistic Infection) பயன்படுத்தி உதாரணமாக ஃ நியூமோனியாக் காய்ச்சல் ஃ வயிற்றோட்டம் ஃகசநோய் என்பன ஏற்படும். இதனால் மரணம் ஏற்டுவது நிச்சயம்.

## எப்படி ஏற்படுகின்றது?

ஃ ஆண்-பெண் உடலுறவு (Hetrosexuals) ஃ இயற்கைக்கு மாறாக ஆணும்- ஆணும் உறவு கொள்ளுதல் (Homo-sexuals) ஃ இயற்கைக்கு மாறாக பெண்ணும் பெண்ணும் உறவு கொள்ளுதல் (Lesbians) ★ போதை வஸ்துக்கள் குறிப்பாக ஊசி மூலம் போதைப் பொருட்களை ஏற்றுபவர்கள், ★ பெண்ணுக்கு எய்ட்ஸ் இருக்கின்றபோது அவள் கர்ப்பவதியானால் தொப்புள் நாணூடாக Transplacental) வயிற்றில் வளரும் குழந்தைக்கு ஏற்படும்.

வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சீர்மாறன்

ஆனாலும் எய்ட்ஸ் நோயாளியைப் பராமரிப்பதனாலோ, அவருடைய உணவு உடைகளைப் பகிர்ந்துகொள்வதனாலோ, ஒரே வீட்டில் வசிப்பதனாலோ, அவர் இருமுகின்றபோதும், தும்முகின்றபோதும் மற்றும் முத்தமிடுவதனாலும் எய்ட்ஸ் பரவாது.

## எய்ட்ஸ்க்குரிய அறிகுறிகள்

எய்ட்ஸ்க்குரிய விசேடமான அறிகுறிகள் ஒன்றும் இல்லை, ஆனாலும் 'எய்ட்ஸ்' இனால் பாதிக்கப்பட்டவருக்கு உடலின் சுயபாதுகாப்புச் சக்தி நலிவடைந்து ஏனைய கிருமிகள் தாக்குவதனால் இடைவிடாத காய்ச்சல் இரண்டு மாதங்களுக்குமேல் நீடிக்கும், இடைவிடாத வயிற்றோட்டம், வாயில் புண்கள், அவிச்சல்கள் ஏற்படுதல், தலைமுடி உதிர்தல், உடல் நிறை குறைதல் அதுவும் குறுகிய காலத்தினுள் உடல் நிறை 10 சதவீதத்தினால் குறைதல், கை இடுக்குகள், கழுத்துப் புறம், தொடை இடுக்குகள் என்பவற்றிலுள்ள நிணநீர்க் கலங்கள் வீக்கமடைதல், ஈரல் மண்ணீரல் என்பன வீக்கமடைதல், களைப்பு, இளைப்பு, சோர்வு, பஞ்சியாக இருத்தல், மனச்சோர்வு, மனப் பயம், மனக்குழப்பம், மரண பயம் இறுதியில் மரணம் ஏற்படும்.

இன்று உலக நாடுகளைக் குறிப்பாக மேற்குலக நாடுகளை ஒரு கலக்குக் கலக்கினாலும் இந்த எய்ட்ஸில் உள்ள நல்ல அம்சம் என்னவென்றால் எமக்கு, சாதாரணமாக ஏற்படுகின்ற ஏனைய தொற்று நோய்களைப் போன்று உதாரணமாக நெருப்புக் காய்ச்சல், கொலரா, வாந்திபேதி, வயிற்றோட்டம், செங்கண் மாரி, போலியோ போன்ற நாம் குடிக்கின்ற நீரினாலோ, உண்ணுகின்ற உணவினாலோ அல்லது ஈக்கள், இலையான்களினாலோ மற்றும் டி. பி. என்கின்ற கசநோய், தடிமன், இருமல் போன்று நாம் சுவாசிக்கின்ற காற்றின் மூலமாகவோ அல்லது மலேரியாக் காய்ச்சல் போன்று நுளம்பினாலோ ஏற்படுவதில்லை.

மாறாக கட்டுப்பாடற்ற நெறியற்ற கண்டவர்களுடனும் உடலுறவு கொள்ளுதல், விபச்சாரத்தில் ஈடுபடுதல், இயற்கைக்கு மாறாக தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுதல், போதைப் பொருட்களை ஊசி மூலம் ஏற்றிக் கொள்ளுதல் அதுவும் ஒரே ஊசியை பலரும் பயன்படுத்துதல் போன்ற மனிதனுடைய தீய பழக்க வழக்கங்களினாலேயே ஏற்படுகின்றது. மொத்தத்தில் இந்த எய்ட்ஸ் நோயை வேண்டுமென்றால் தேடிப்போய் நாம் பெற்றுக் கொள்ளலாம். வேண்டாமென்றால் விலகிக் கொள்ளலாம், அதுவாக எம்மை வலியத் தேடிவராது.

எனவே எம்மில் ஒவ்வொருவருக்கும் எமது சமூகத்திற்கும், எமது தேசத்திற்கும் எய்ட்ஸ் ஏற்படாமல் இருக்க வேண்டுமாயின் எமது தமிழ்க் கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களுக்கேற்ப எமது முன்னோர் வாழ்ந்து காட்டியது போல 'ஒருவனுக்கு ஒருத்தி' என்கின்ற புனிதமான தாம்பத்திய உறவுடன் வாழ்வோம். விபச்சாரத்தில் ஈடுபடுபவர்கள், போதைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களைக் கண்டால், சமூகத்தினதும், தேசத்தினதும் நன்மை கருதி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்துவோம். வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுடன் (கணவன்-மனைவி தவிர்ந்த) அவதானமாக இருப்பது நல்லது. வெளிநாடுகளில் நீண்டகாலம் வசிப்பவர்களுக்கு இங்கு கல்யாணம் பேசுகின்றபோது அவர்களுடைய அங்கேயுள்ள பழக்கவழக்கங்கள், தொடர்புகள்பற்றி சம்பந்தப்பட்டவர்கள் விசாரித்து அறிந்துகொள்வது நல்லது. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் வெளிநாடுகளில் தீய பழக்கங்களுக்கு அடிமையானவர்கள் வாய்ப்புக் கிடைக்கின்றபோது தமது இரத்தத்தை மருத்துவ பரிசோதனை செய்து தமது நிலைமையைத் தெரிந்து கொள்வதன்மூலம் தமக்கும் பிறருக்கும் பெரும் நன்மையைச் செய்யலாம். (சி)

## பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் டிசம்பர் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று சித்தன்கேணி கணேச வித்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் திரு மா, புலேந்திரன் தலைமையில நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. து. வைத்திலிங்கம் சிறப்புரை நிகழ்த்துவார். -72

---

உதைப்பந்தாட்டம்:

## இறுதி ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்டலீக், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில், 'ஸி' பிரிவின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (2ம் திகதி) யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

3ம் இடத்துக்கான போட்டியில் தொடர்மாடி சென். லூட்ஸ் கழகமும் யங்ஸ்ரார்ஸ் கழகமும் பி. ப. 3 மணிக்கு மோதும். இறுதி ஆட்டத்தில் அறிவொளி விளையாட்டுக்கழகமும் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் பி. ப. 4-15 மணிக்கு மோதும். (வி)

இல. தமிழர் நால்வர்

# தமிழகத்தில் கைது

(சென்னை)

இலங்கை தமிழர் நால்வர் உட்பட 8 பேர் தமிழகபொலிசாரால் சென்னையில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இவர்கள் வைத்திருந்ததாகவும் கைத்துப்பாக்கி ஒன்றும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே அனைவரும் கைது செய்யப்பட்டதாகவும் விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். (க-சி

## ஆங்கில தினவிழா

(நல்லூர்)

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சித் தொடரில் ஆங்கில தினவிழா அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி நூலக மண்டபத்தில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகளுக்கு கல்லூரியின் ஆங்கில மன்றத்தலைவி செல்வி ஸ்ரீ துர்க்கா தலைமை தாங்கினார்.

யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் லலித் ரவீந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். -175

கசிப்பு காச்சும்போது

# காவல்துறையிடம் சிக்கினர்

(உடுவில்)

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த ஒரு வீட்டில் ஒருவர் சட்டவிரோதமாக கசிப்புகாய்ச்சும்போது திடீரென அங்கு சென்று சோதனையில் ஈடுபட்ட சுன்னாகம் காவல்துறையினர் அவ்வீட்டில் இருந்து ஆறு லீற்றர் கசிப்பையும், கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தவென வைத்திருந்த முப்பது லீற்றர் கோடாக் கலவையையும் கைப்பற்றினர்,

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கசிப்பு காய்ச்சுவதில் ஈடுபட்டவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது. —109

## கோழிகள் திருட்டு

(அரிபாலை)

யாழ். அர்ச்சுன வீதி இராசாவின் தோட்டத்திலுள்ள ச. இராசநாயகம் என்பவருடைய வீட்டில் கடந்த 25ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு பின்புறமாக வந்த திருடர் கோழிக்கூட்டிலுள்ள கோழிகளைப் பிடித்து சென்றுள்ளதாக தெரிய வருகின்றது. (59)

## இரு பரீட்சகர் நியமனம்

(அச்சுவேலி)

தொலைக் கல்வித்துறை மூலம் ஆசிரியப் பயிற்சி பெறும் பயிலுநர்களின் கல்விப் பிரயோக இறுதி மதிப்பீட்டு வேலைகளை மேற்கொள்வதற்கு யாழ். மாவட்டத்திற்கு இரண்டு பிரதம பரீட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

யாழ். வடக்கு கல்வி வலயத்திற்கு பருத்தித்துறைத் தொலைககல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் திரு, சித்திர வடிவேலும், யாழ். தெற்கு கல்விவலயத்திற்கு யாழ். இந்துக் கல்லூரி தொலைக் கல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் திரு. எஸ். சரவணமுத்துவும் பிரதம பரீட்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். -74

பருத்தித்துறை செஞ். சங்கத்தில்

# இரு தினங்கள் மக்கள் தொடர்புகொள்ள ஏற்பாடு

(நெல்லியடி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தொண்டமானாறு முதல் மணற்காடு வரையிலான பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி மக்கள் தொடர்புக்கென வாரத்தில் புதன், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைப் பிரிவின் அலுவலகம் சேவையாற்றவுள்ளது.

இது தொடர்பாக இச்சங்கத்தின் பொறுப்பாளர் திரு. எஸ். தவராசா தெரிவிக்கையில்:

இப்பகுதியில் வேறு அலகுகள் எதுவும் இன்மையால் பொதுமக்கள் தமது தேவைகளைக் குறித்த இரு தினங்களிலும் நிறைவு செய்து கொள்ளலாமென தெரிவித்தார். 160

ஊனமுற்றோருக்கு

# கதிரைபின்னல், தையல் இலவச பயிற்சிகள்

(கொழும்புத்துறை)

யாழ், ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் ஊனமுற்றவர்களுக்கு மட்டும் இலவசமாக சங்கத்தின் சார்பில் கதிரை பின்னல், தையல் பயிற்சிகளை நடாத்தவுள்ளனர்

இப்பயிற்சியை இலவசமாகப்பெற விரும்பும் ஊனமுற்றவர்கள் இல. 16 கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளியில் உள்ள சங்கப்பணிமனையில் நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்பு கொள்ளுமாறு சங்கப் பொருளாளர் திருமதி ஜே. எம். சிவப்பிரகாசம் தெரிவித்தார். - 154

### மணிவாக்கு

மூடர்கள் எதைப் பார்த்தாலும் அதில் உள்ள குற்றத்தையே நாடுவார்கள். காகம் இனிய கனிகள் இருக்கும் தோட்டத்தில் பிரவேசித்தாலும் வேம்பம் கனியையே இச்சிக்கும்.

' நீதிவாக்கியம்

## நமது நோக்கு

### பாடசாலைத் தளபாடங்கள்

போர்க்காலச் சூழ்நிலையால் மாணவர்களின் கல்விக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டன.

இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதல்களால் விமானப்படையினரின் குண்டு வீச்சுக்களால் பாடசாலைக் கட்டடங்கள் மாத்திரமா சேதமாகின?

அக்கட்டடங்களுள் அகப்பட்ட தளபாடங்களும் நொருங்கிச் சிதைந்தன,

அது மாத்திரமல்ல இலங்கை இந்திய இராணுவத்தினர் பல பாடசாலைகளில் முகாமிட்டிருந்த வேளைகளில் பாடசாலைத் தளபாடங்களுக்கு என்ன நேர்ந்தது?

அகதிகளாக வந்த பெருந் தொகையான மாணவர்களுக்குப் போதிய தளபாட வசதி அளிக்கப்பட்டதா?

தளபாடப் பற்றாக்குறையினால் மாணவர் படும் அவதியும், ஆசிரியர்கள் சந்திக்கும் பிரச்சனைகளும் ஏராளம்!

குறிப்பாக பரீட்சைகள் நடக்கும் போது அதற்கான நேரசூசிகள் அமைக்கும்போது அதிபர்கள் படும்பாடு எழுத்தில் வடிக்கக்கூடியதா?

கொழும்பிற் செய்யப்பட்ட தளபாடங்களைக் கப்பல் மூலம் தருவிக்கும் போது செலவு அதிகரிக்கின்றது, தளபாடமாக ஏற்றிவரும்போது கப்பலில் அதிக இடம் தேவைப்படுகின்றது.

எனவே தான் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வடகிழக்குமாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

அதன்படி இப்பகுதிக்குத் தேவையான தளபாடங்களைச் செய்வதற்கான இரும்புக் கம்பிகள், பலகைகள் ஆகியவற்றைக் கப்பல் மூலம் தருவித்து இங்கேயே அவற்றைச் செய்வதாற் செலவுகுறையும்.

இந்தத் திட்டம் செயற்படுமா என்ற கேள்விக்குறியும் எழுகிறது.

ஏனெனில் தளபாடத்திற்கான மூலப் பொருட்களைத் தருவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவைப்படுகிறது.

பாதுகாப்பு என்றபோர்வையில் தமிழ் மாணவரது தேவைக்கான தளபாட உற்பத்திக்கான மூலப் பொருட்கள் தடைவிதிப்பதில் எவ்விதநியாயமும் இல்லை.

புதிய அரசு இதைக் கவனத்திற்கு எடுத்து தடை அகற்ற ஆவன செய்யவேண்டும்.

# ஜனாதிபதி பதவியேற்பு தினத்தில் தமிழர்கள் மீது தாக்குதல்

## ஒருவர் பலி; பல கடைகள் தீக்கிரை

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவியேற்பு வைபவத்தைக் கொண்டாடுமுகமாக வெடி கொளுத்துமாறு தமிழ் வர்த்தகர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டும், அவர்களது கடைகள் தீக்கிரையாக்கப்பட்டும், தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டதுமான அதிர்ச்சி தரும்சம்பவங்கள் மஹவுஸ்ஸ தோட்டப் பகுதியில் நடைபெற்றுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இச்சம்பவங்களின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில், மஹவுஸ்ஸ கடைத் தெருவிலிருந்த தமிழ் வர்த்தகருக்குச் சொந்தமான 8 கடைகள் பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், இக்கடைகளுக்குள்ளேயே இவ்வர்த்தகர்களின் குடும்பங்கள் வசித்து வந்ததால், மொத்தம் 43 பேர் வீடு வாசல்களற்று அகதிகளாகி உள்ளனர்.

கடைகளுக்குத் தீ வைத்த காடையர்கள் தமிழர்களின் கடைகளைத் தேடி/ அவற்றுக்கு மட்டுமே தீ வைத்துள்ளனர். இச்சம்பவங்களின் போது பொன்னையா பொன்னன் [45வயது] என்ற தொழிலாளி கொல்லப்பட்டார். -ரி

### இலவச மூக்கு கண்ணாடி

[அரியாலை]

பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாஷையூர் பகுதியிலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கண்பார்வைகுறைந்த 74 மக்களுக்குயாழ். லயன்ஸ் கழகத்தினரால் இலவசமாக மூக்கு கண்ணாடி வழங்கப்பட்டது -59

### ஆஸ்பத்திரிக்கு ஜெனரேட்டர்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு யாழ். சுகாதார திணைக்களத்தினால் ஜெனரேட்டர் ஒன்று கடந்தவாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. -72

### பரீட்சைப் பெறுபேறுகள்

(திருநெல்வேலி)

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பில் வெளியிடப்பட்ட இப்பெறுபேறுகள் டிசம்பர் 5ம் திகதிக்கு முன்னர் எடுத்து வரப்படும் என்று கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 157

## இன்று

]யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்படும் யாழ் இந்துக்கல்லூரி முன்னை நாள் அதிபர் அமரர் ந. சபாரத்தினம் அவர்களின் நினைவுப் பேருரை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று 30 ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் ''அபிவிருத்தியில் கோட்பாடுகளும் பரிமாணங்களும் பெறுமாணங்களும் என்னும் தலைப்பில் பேருரை நிகழ்த்துவார். 162

* *

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 2 இன் கல்வி கலாசார விளையாட்டு அபிவிருத்திச்சபை நடத்தும் தொழில்நுட்ப, ஓவிய, முறைசாராக் கல்விப்பிரிவுக் கண்காட்சி இன்று 30-ம் திகதியும் நாளை 1-ம் திகதியும் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. 139

* *

[கொழும்புத்துறை]

இருபாலை தமிழ் மாமன்றத்தின் இலக்கிய முற்றம் தொடர் ஏழு, இன்று 30ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்றப்பணி மனையில் நடைபெறும். 254

0 0 0

(உடுவில்)

உடுவில் இராமநாதன் கல்லூரி ஸ்தாபகர் நினைவு நாளை முன்னிட்டு இன்று 30-ந் திகதி காலை 8-30 மணிக்கு சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலையொன்று கல்லூரி முன்றலில் திறந்துவைக்கப்படவுள்ளது.

அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் செல்வி தங்கம்மா அப்பாகுட்டி சிலையை திறந்துவைப்பார். -109

## பலதும் பத்தும்

### தாகம் தீர மாத்திரமா?

ஒருவன் தனக்கு வேண்டிய நீரைப் பருகாமற் போனால் சீக்கிரத்தில் பல மற்றுப்போவான். உடலில் சேரும் விஷ பதார்த்தங்களைத் தோல் முதலிய உறுப்புக்கள் மூலம் வெளியேற்ற நீர் உதவுகிறது.

குளிக்கும்போது. உடலிடலின் மேற்புறத்து அழுக்குப் போகும்.

குடிக்கும்போது (அதாவது நீரை) உடன் உட்புறத்து அழுக்குப் போகும்!

நீராய்...நோய் காவிகளான கிருமிகளும் உள்ளே போகும். எனவே கொதித்தாறிய நீரே பருகவேண்டும்.

சிலர் கொதிக்கும் நீரைக் குளிரவைக்கத் தண்ணீரைக் கலக்குகிறார்கள். அது தவறு—ஏனெனில் வெதுவெதுப்பான நீரில் நோய்க் கிருமிகள் பலமடையும்!

—மயூரன்

## தமிழீழ நீதிமன்றில்

# கசிப்பு வைத்திருந்தவருக்கு

## 8000 ரூபா அபராதமும் சிறையும்

(உடுவில்)

சட்டவிரோதமாக வீட்டில் இரண்டேகால் போத்தல் கசிப்பு வைத்திருந்த உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த ஒருவருக்கு சுன்னாகம் மாவட்ட நீதிமன்ற நீதியாளர் அறிவொளி 8000 ரூபா அபராதமும் 15 நாள் சிறைத் தண்டனையும் விதித்தார். அபராதப் பணம் செலுத்த தவறின் மேலும் 320 நாள்சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார்.

மேலும் பல கசிப்பு சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்த நீதியாளர், இணுவில் கிழக்கைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு 2,000 ரூபாவும், உடுவிலைச் சேர்ந்த நபருக்கு ஆயிரம் ரூபாவும், குப்பிளான் தெற்கு- மயிலங்காட்டைச் சேர்ந்த ஒருவருக்கு 2000 ரூபாவும் அபராதம் விதித்தார்.

உரும்பராய்மேற்கைச்சேர்ந்த நபருக்கும், ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த நபருக்கும் தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதப் பணம் செலுதத தவறினால் இருவரும் தனித்தனியே 80 நாள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார்.

இவர்கள் யாவரும் சட்டவிரோதமாக ஒரு போத்தல் வரையான கசிப்பினை வீட்டில் வைத்திருந்தமைக்காக சுன்னாகம் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. -100

### வைத்திய அத்தாட்சிபத்திரம்

(பண்டத்தரிப்பு)

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் தங்கள் சுகவீன லீவுக்கான வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை மேற்படி வைத்தியசாலைவெளி நோயாளர் பிரிவிலிருந்தே பெறவேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். 72

## இராசி பலன்

30 - 11 - 1994

புதன்கிழமை

(தமிழுக்குகார்த்திகை14)

துவாதசி நண்பகல் 12-55 வரை: சித்திரை காலை 10-55 வரை சித்தயோகம் இராகு காலம் நண்பகல் 12-04 முதல் 1-34 வரை சுபவேளை மாலை 4-32 முதல் 6-02 வரை பிரதோசவிரதம்,

மேடம்: தொழில் திறமை, சத்திய வாக்கு, பணவரவு.

இடபம்: காரியசித்தி, வெகுமதி, பிரயாசம்.

மிதுனம்: வாக்குகலகம். உஷ்ணசுரம், அலைச்சல்.

கடகம்: நண்பர் பிரிவு, மனக்கவலை, பாதிப்பு குறைவு

சிங்கம்: சத்துரு ஐயம், பிறர் உதவி, பயணம்.

கன்னி: மனை மாற்றம், இனசனகவலை, யோசனை.

துலாம்: நினைத்ததைச் சாதித்தல், மாமனார் அறிவுரை, தானதர்மம்.

விருச்சிகம்: பயனற்ற செய்கை, வேலைப்பளு, தடுமாற்றம்.

தனுசு: கல்வியால்பெருமை, குடும்பசுகம், புதிய நட்பு.

மகரம்: புத்திரர் சகாயம், சுபகாரியம், விருந்துண்ணல்,

கும்பம்- குடும்பபகை, தொழில் நஷ்டம், மானக் குறைவு.

மீனம், காரியத் நடை, தூங்கிப்போதல் நடைக்கஷ்டம்.

ஜோஸ்யர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-11-30 –

புதன் இரவு

08-01 - லெப்ரினட் கேணல் ஜோய் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
08-20 - ஏர்முனை - நிகழ்ச்சி நெற்பயிரை தாக்கும் பிரதான பீடைகள்'' சித்திரம்
08-30 - செய்திகள்
08-40 - நாடகம் - சிவசக்தி எழுதிய - ''அகமும் முகமும்''
09-00 - இரவு நிகழ்சிகள் யாவும் நிறைவு பெறும்,

1994-12–01

வியாழன் காலை

07-02 - மாவீரவணக்கம்
07-15 - விடுதலை கீதங்கள்
07-30 - செய்திகள்
08-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 - காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

# தூய இன விதை நெல் வகைகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

1994/95 காலபோக நெற்செய்கையாளரின் நன்மை கருதி விவசாய திணைக்களத்திலிருந்து தருவிக்கப்பட்ட தரமான உயர் விளைவைப் பெறக்கூடிய தூய இனநெல் வகைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்குவிநியோகித்து வருகின்றது.

பசுமை வேளாண் சேவை நிலையத்தின் ஊடாக விநியோகிக்கப்பட்டுவரும் நெல் இனங்களான பி ஜி. 350. பி. டபிள்யூ 351, பி. ஜி. 300, பி,ஜி. 500 ஆகிய சிறந்த இன நெல்விதைகளை பயிரிடுவதன் மூலம் உயர்விளைவைபெற்று கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### உலக எய்ட்ஸ்தின வைபவம்

[யாழ்ப்பாணம்]

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றமும் கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்திய நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான பேச்சு, கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசளிப்பு விழாவும் உலக எய்ட்ஸ் தின வைபவமும் நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

### வீதி சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் கொண்டலடி வீதி கடந்த பல வருடங்களாக திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாது குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. 162

காணி எல்லைதோறும் அணையமைத்தே – நாம்
காணும் நீரை சேமித்திடுவோம்.

## அடுத்த வருடம் சமாதானம் வந்தாலும்

# இலங்கையின் பாதுகாப்பு செலவை குறைக்கமுடியாது

## முன்னாள் அமைச்சர் றெனி

(கொழும்பு)

அடுத்த வருடமளவில் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டாலும் கூட சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவைக் குறைக்கமுடியாது என முன்னாள் நிதி அமைச்சர் றெனி டி மெல் தெரிவித்துள்ளார்,

புதிய பொ. ஐ. மு. வின் நிதிக்கொள்கை மிகவும் தவறுனது, இவை அமுல்படுத்தப்படமுடியாதவை பொருளாதார கொள்கைகள்வெறும் அரசியல் நோக்குடன் வெளிப்படுத்தபட்டவை இந்தப் பொருளாதாரக் கொள்கையால் நாட்டில் பணவீக்கம் அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொ. ஐ. மு. தான் கூறிய திட்டங்களை அமுல் செய்ய பணம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். -ரி

## ஆந்திராவில் கண்ணிவெடி

## எட்டு பொலிஸார் பலி

(ஹைதாரபாத்)

ஆந்திரபிரதேசத்தில் நக்சலைற் கிளர்ச்சியாளர்கள் வைத்ததரை கண்ணியொன்று வெடித்ததால் 8 பொலிஸார் உட்பட 10 பேர் பலியாகினர்.

ஆயினும் கிளர்ச்சியாளர்கள் இலக்குவைத்த ராஜாங்க அமைச்சர் இந்த சம்பவத்தின் போது தப்பித்துக்கொண்டார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிசார் பயணம் செய்த லொறி வரன்ரன் என்னும் பட்டினத்திற்கு அருகில் மதகு ஒன்றை அண்மித்தபோது தரை கண்ணி வெடித்ததா தெரிவிக்கப்பட்டது. கே:ரி

அலுவலகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள இ. தொ, க. காரியாலயத்திலேயே அலுவல்களை நடாத்தி வருகிறுர்.

கிராமோதய மண்டலவில் இவருக்கு காரியாலயம் வழங்கப்பட இருந்தபோதும் அதி ஏற்பட்ட சர்ச்சையால் அ வழங்குவதும் தடைப்பட்டது. கே-ரி

## தேர்தலுக்குப் பின்னர் ஏழாயிரம் புகார்கள்

[கொழும்பு)

தேர்தலுக்குப் பின் ஐ, தே. க விற்கு ஏழாயிரம் புகார்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் வன் முறைகளில் உயிரிழந்த காயமடைந்த ஐ. தே. க ஆதரவாளர் குடும்பங்களுக்கு ஏழு லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வன்முறைகளினுல் பாதிக்கப்பட்ட தமது ஆதரவாளர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு ஐ. தே. க வினர் ஜனதிபதி சந்திரிகாவை கடிதம் மூலம் கேட்டுள்ளனர். (ரி)

## சர்ச்சைக்குரிய ரஷ்ய ஆயுத கொள்வனவில் ஒரு திருப்பம்

(கொழும்பு)

முன்னைய அரசு ரஷ்யாவுடன் செய்துகொண்ட சர்ச்சைக்குரிய 350 கோடிரூபாவுக்கான ஆயுதபேரத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' ராணுவ பகுப்பாளர் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: கடந்த வாரம் விமானப்படை 3 ரஷ்ய அன்ரறேவ் போக்குவரத்து விமானங்களுக்கும் 6 பெரிய ரஷ்ய ஹெலிகொப்டர்களுக்குமான திறந்த கேள்விப்பத்திரங்களை கோரியுள்ளது.

கடற்படையும், மூழ்கடிக்கப்பட்ட 'சாகரவர்த்தன' கப்பலுக்கு ஈடாகவும் வேறொரு கப்பலுக்குமாக 2 பீரங்கி படகுகட்கு கேள்விப்பத்திரங்களை கோரியுள்ளது.

இந்த கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டபட்டமையால் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட ரஷ்ய ஆயுத பேரம் நடைமுறைபடுத்தப்படாதெனவேநம்ப இடமுண்டு.

முன்னைய அரசு இந்த ஆயுத பேரத்தில் 10 வீதமான 35 கோடி ரூபாவை ஏற்கனவே செலுத்தியபோதும், இந்த அரசு இந்த பேரத்தின் தீர்க்கமானமுடிவை இன்னும் அறிவிக்கவில்லை. இந்த ஆயுத பேரம் நிறுத்தமுன் இங்குவந்து சேர்ந்த ஆட்களை கொண செல்லும் ராணுவ வாகனங்களும் பழுதடைந்தநிலையிலுள்ளன.

இந்தநிலையில் அரசாங்கம் முன்னர் செலுத்தியபணத்தை மீளப்பெறப் போகிறதா அல்லது இந்த ஆயுத பேரத்தை அப்படியே ரத்துச்செய்யப் போகிறதா என்பது பற்றி இன்னும் மக்களுக்கு தெளிவபடுத்தவில்லை என்றும் அவர் மேலும் அதில் தெரிவித்துள்ளார். (கே-ரி)

## எயர் லங்காவிற்கு தொண்டாவின் பேரன் 3கோடி40லட்.செலுத்தினர்

(கொழும்பு)

எயர் லங்கா விமானசேவைக்கு செலுத்துமதியாகவிருந்த 4 கோடி 50 லட்சம் ரூபாவில் 3 கோடி 40 லட்சம் ரூபாவினை திரு. எஸ். தொண்டமானின் பேரனுன திரு. ஆறுமுகம் செலுத்தியிருப்பதாக எயர்லங்கா நிறுவன தலைவர் சேபால ஆட்டிகல தெரிவித்துள்ளார்,

அண்மைக்காலமாக சென்னையில் எயர் லங்கா விற்பனை முகவராக இருக்கும் தொண்டமானின் குடும்பத்தினரின் நிலுவைகள் குறித்து சர்ச்சைகள் கிளம்பியதையடுத்தே இப்பணம் செலுத்தப்பட்டது.

எனினும் மீதிப்பணமான ஒருகோடி 10 லட்சம் ரூபாவும் செலுத்தி முடியும் வரை இந்த முவருக்கு கடன்பற்று வசதிகள் வழங்கப்படமாட்டாதென திரு. ஆட்டிகல தெரிவித்தார். கே-ரி

ஜே. ஆர். – டி. பி.

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பாடுகளை மேற்படி கமிஷனுக்குச் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி சம்பந்தமான கொடுப்பனவுகள் தொடர்பாகவே, இந்த முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும் 'ராவய' மேலும் தெரிவித்துள்ளது. இ-ரி

## முதனிலை தேர்வு பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ முதனிலைத்தேர்வின் மாணவர்களின் பெறுபேறு சகல பாடசாலைகளுக்கும் அந்தந்தக் கல்விக் கோட்டங்கள் ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும்,பாடசாலை அதிபர்கள் கல்விக் கோட்டங்களில் இன்று 12 மணிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளலாமெனவும் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (ரி)

புலிகளுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவிருந்த இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டன.

காமினியின் கொலையையடுத்து கொலை விசாரணையின் பின்னரே பேச்சுவார்த்தை மீண்டும் தொடரும் எனவும் அரசு அறிவித்திருந்தது.

இப்போது மீண்டும் இந்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

பேச்சுவார்த்தையை என்ன திகதியில் ஆரம்பிப்பது என்பது பற்றி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இதுவரையில் இணக்கம் ஏற்படவில்லையெனவும் ஏ. எப். பி. செய்தியை மேலும் மேற்கோள்காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-ரி)

பொலிஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞய்வு வட்டாரங்கள் தெரிவித்த தகவலையடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்தாம்.

இதேவேளை கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளிலிருந்து பெருமளவு விடுதலைப்புலிகள் யாழ்.நகருக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் பாரிய தாக்குதல் நடாத்துவதற்கான முதல் படியாக இது இருக்கலாமெனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் கடந்த வாரம் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள படைமுகாம்கள் பலப்பபடுத்தப் பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி - ரி)

புலிகளின் கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவரது வழமையான நடமாட்டத்தை மாற்றியமைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளார். தறபோது இவரது நடமாட்டத்தை புலிகள் அவதானித்துவருவதாகவும் 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு கேணல் ரத்வத்த இதுவரை இணங்கி வராததை அடுத்தே கொலைப்பட்டியலில் அவரது பெயர் முதலில் இடம் பெற்றுள்ளதாக பாதுகாப்பு உளவுச் சேவை அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

கேணல் ரத்வத்த கொல்லப்பட்டால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு தகுதியான ஒருவர் கிடைக்கமாட்டார் என விடுதலைப் புலிகள் கருதுவதாகவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளதாக யுக்திய மேலும் தெரிவித்துள்ளது. (இ - சி - ரி)

க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் இப்பரீட்சைக்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகத்துக்குப் பொறுப்பான அஞ்சல் அதிபரைக் கொண்டு பற்றுச்சீட்டு இலக்கத்தையும், திகதியையும் உறுதிப்படுத்துவித்து, அஞ்சல் அலுவலக முத்திரையையும் பொறிப்பித்தல் வேண்டும்.

இதற்கமையாத விண்ணப்பப்பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பம் அனுப்பிய பதிவுக் கடிதப் பற்றுச் சீட்டையும், அடையாள அட்டையையும் வலயக் கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளரிடம் இருந்து சுட்டெண் விபரங்கள் கிடைக்கப்பெற்றுல் மட்டுமே இவ்விண்ணப்பதாரிகளுக் குத் தற்காலிக அனுமதி அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். -ரி

## வேளாண் மன்னர் தெரிவு டிசம்பர் 15 வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வேளாண் மன்னர் தெரிவுப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் திகதி டிசம்பர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நெல் பயிரிடும் விவசாயிகளிடையே மழையை நம்பிய நெற்செய்கையிலும் நீர்ப்பாச்சுகை நெற்செய்கையிலும் தனித்தனியே வட தமிழீழத்திலுள்ள சகல ட்டத்திலும் நடாத்தப்பட்டு வருவது தெரிந்ததே,

மழைகாரணமாக விதைப்பு தாமதமடைவதனுலேயே இந்நீடிப்பு வழங்கப்படுதாக தெரிவிக்கட்டுள்ளது,

## பரீட்சை மாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பொதுக் கலைமாணிப் பரீட்சை, பகுதி 11ல் நேரஅட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் டிசம்பர் மாதம் 8ம், 9ம், 10ம் திகதிகளில் மாலை 1-30—4-30மணி வரை நடைபெற இருந்த பாடங்கள், முறையே எதிர் வரும்டிசம்பர் 12 13, 14 ஆகிய திகதிகளில் காலை 9-00 மணி முதல் 12-00மணிவரை நடைபெறும். இதன் விபரங்களை வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு அறிவித்தல் பலகையில் பார்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. -இ

புலிகளுடன் பேசவேண்

1ம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்து பாரிய இராணுவ தாக்குதல் ஒன்றை அரசாங்கம் சந்திக்கவேண்டி வரலாம் அப்படி நடந்தபின் உடனடிப் போர்நிறுத்தம் செய்யமுடியாமல் போய்விடும்.

புலிகளிடம் பலம் இருப்பதால்தான் அரசும் உலகமும் அவர்களோடு பேசவேண்டும் என்று சொல்கின்றன.

காமினி கொல்லப்பட்டது குறித்து புலிகள் மீது சந்தேகம் இருக்கிறது. விசாரணைகளும் நடக்கின்றன. ஆனுலும் புலிகள் பற்றி அரசாங்கம் இதுவரை கடுமையாகப்பேசவில்லை. புலிகளோடு அடுத்த கட்டப்பேச்சு எப்போது என்று தான் அரசாங்கத்திடம் எல்லோரும் கேட்கிறுர்கள் என்றும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. [ரி)

பிரேமச்சந்திரா

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

திருமதி பிரேமச்சந்திரா நாடாளுமன்ற ஆசனத்தை ஏற்க மறுத்ததை.தொடர்ந்து பிறிதொருவரை நியமிக் ஐ. ஐ. தே. முன்னண இந்தவாரம் மீண்டும் கூ வுள்ளது. [கே - ரி)

பேச்சுக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் முன்வைக்கப்பட் கருத்துக்களை அங்கீகரிக்கா போன்ற எடுகோள்களின் ம தியில் பேச்சு வார்த்தைக் கான தளம் விரிவடைகின்றது என்றும் அட்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கு மத்தியில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் பேச்சுவார்தை மூலம் வரும் கருத்துக்கள் தீர்வுகளாக இடம்பெறவேண்டும் அதுவே அரசியல் அங்கீகாரம் பெற்ற தீர்வாகவும் அமையும் என்ற உறுதிப்பாடும் அரச மட்டத்தில் நிலவுகின்றது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. [ரி]

காமினி கொலை

[1ம் பக்கத் தொடர்ச்சி[

காமினி திஸாநாயக்காவி கொலையில் சம்பந்தப்பட் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் விடயத்தில் இந்தி அதிகாரிகள் இருவரின் உதவியைப் பெற்றுத்தருமாறு அவர் அரசாங்கத்திடம் கொரிக்கை விடுத்திருந்தார்.

திருமதி சிறிமா திஸாநாயக்கா தான் அரசாங்கத்திற்கு விடுத்த கோரிக்கைக்கு தக்க பதில் கிடைக்கவில்லை என்றும் அரசு இவ்விடயத்தில் அக்கறையின்றி இருப்பதாகவும் திருமதி சிறிமா மேலும் தெரிவித்துள்ளார். -ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/16336/B]